# அல் அதான்

பாடம் 14

நாம் தினமும் ஐந்து வேளை தொழுவது கடமையாகும். தொழுகைக்கு நேரமானதை அறிவிப்பதற்காக 'முஅத்தின்' அதான் கூறுவார். அவ்வேளை நாம் மௌனமாக இருந்து அதானுக்கு பதில் கூற வேண்டும். அந்த அழைப்பை ஏற்றுப் பள்ளி வாசலுக்குச் செல்ல வேண்டும். இங்கு அதானையும் அதன் பொருளையும் கவனிப்போம்.



اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ   اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ

اَشْهَدُ اَنْ لاَّ اِلٰهَ اِلاَّ اللّٰهُ   اَشْهَدُ اَنْ لاَّ اِلٰهَ اِلاَّ اللّٰهُ

اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ   اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

حَيَّ عَلَى الصَّلٰوةِ   حَيَّ عَلَى الصَّلٰوةِ

حَيَّ عَلَى الْفَلاَحِ   حَيَّ عَلَى الْفَلاَحِ

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ   لاَ اِلٰهَ اِلاَّ اللّٰهُ

அல்லாஹ் மிகப் பெரியவன்.
அல்லாஹ் மிகப் பெரியவன்.
அல்லாஹ் மிகப் பெரியவன்
அல்லாஹ் மிகப் பெரியவன்.

வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் அன்றி வேறு எவருமில்லையென்று சான்று கூறுகின்றேன்.
வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் அன்றி வேறு எவருமில்லையென்று சான்று கூறுகின்றேன்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சான்று கூறுகின்றேன்.
முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சான்று கூறுகின்றேன்.

தொழுகைக்கு விரைந்து வாருங்கள்.
தொழுகைக்கு விரைந்து வாருங்கள்.

வெற்றி பெற விரைந்து வாருங்கள்.
வெற்றி பெற விரைந்து வாருங்கள்.

அல்லாஹ் மிகப் பெரியவன்.
அல்லாஹ் மிகப் பெரியவன்.
வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் அன்றி வேறு எவருமில்லை.

**அதானைக் கேட்போம்; அதன்படி நடப்போம்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புங்கள்.**

**அல்லாஹு அக்பர், அஷ்ஹது, ஐந்து வேளை, அதான், லாஇலாஹ இல்லல்லாஹ், ஹய்யஅலல்பலாஹ்**

1. முஸ்லிம்கள் தினமும் ........................ அல்லாஹ்வைத் தொழுவார்கள்.
2. தொழுகைக்கு நேரமானதும் முஅத்தின் ...................... சொல்வார்.
3. அல்லாஹ் மிகப் பெரியவன் என்பதை அறபியில் ............................. என்போம்.
4. ........................... என்றால் நான் சாட்சி கூறுகின்றேன் என்று பொருள்படும்.
5. .......................... என்பதன் பொருள் அல்லாஹ்வைத் தவிர, வணக்கத்துக்குரியவன் வேறு எவரும் இல்லை என்பதாகும்.
6. .................... என்றால் வெற்றி பெற விரைந்து வாருங்கள் என்று பொருள்படும்.